TNPD110002032022

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை.**
**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A., B.L,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07ஆம் நாள் சனிக் கிழமை
2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி திங்கள் 23ம் நாள்

**அசல் வழக்கு எண்.25/2022**
**CNR. No. TN-PD-11000203-2022**

சுரேந்திரபாபு ... வாதி

**//எதிராக//**

மங்கையர்கரசி
அவரது அதிகார முகவர்
கோபாலகிருஷ்ணன் மூலமாக ...பிரதிவாதி

இவ்வழக்கானது 05.08.2022ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.P.வடிவேல், B.Sc., B.L.,** அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.K.அன்பழகன், B.A., B.L.,** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வாதங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**தீர்ப்புரை**

தாவாச் சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதியோ அவரது ஆட்களோ இடைஞ்சல் செய்யக்கூடாதென நிரந்தர தடையாணை பரிகாரம் வழங்கக் கோரியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதியால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:38:39 +0530

**வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:–**

2. தாவாச் சொத்து கடந்த 13.09.1934ம் தேதி வாதியின் தாத்தா P.K.K. ரெங்கசாமி செட்டியார் என்பவரால் கிரையம் பெறப்பட்டு, அவரால் அனுபவம் செய்யப்பட்டு வந்துள்ளது. மேற்படி P.K.K. ரெங்கசாமி செட்டியார் கடந்த 06.08.1983ம் தேதி அவரது மகன்கள் முத்துச்சாமி, ராமநாதன், பாலசுப்பிரமணியன் மற்றும் சந்திரசேகரன், மகள் வேதவதி ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துள்ளார். மேற்படி சந்திரசேகரன் மற்றும் முத்துச்சாமி ஆகியோரும் இறந்துவிட்டனர். மேற்படி முத்துச்சாமிக்கு நடராஜன், தியாகராஜன், இராதாகிருஷ்ணன், சுந்தரவெங்கடேசன், மோகன் பிரபாகரன், செண்பகவள்ளி, மங்கையர்கரசி, காஞ்சனமாலா, ஜானகி ஆகியோர் வாரிசுகள் ஆவர்.

3. தாவா புல எண்.361/16இல் கண்ட சொத்து வருவாய் ஆவணங்களில் தவறுதலாக அரசு புறம்போக்கு என பதிவாகியுள்ளது. மேற்படி விபரம் வெளியூரில் வசித்து வரும் மேற்படி ரெத்தினசாமி செட்டியாரின் வாரிசுகளுக்கு தெரியாமல் இருந்துள்ளது. ஆனால், தாவாச் சொத்தில் மேற்படி ரெத்தினசாமி செட்டியாரின் வாரிசுகள் தொடர்ந்து 80 வருடங்களாக தனித்த பாத்தியத்திலும், அனுபவத்திலும் இருந்து வந்துள்ளனர். தாவாச் சொத்து அரசு புறம்போக்கு என பதிவாகியுள்ள விபரம் மேற்படி ரெத்தினசாமி செட்டியாரின் வாரிசான இராமநாதன் என்பவருக்கு தெரிய வந்து, மேற்படி இராமநாதனால் புதுக்கோட்டை சார் ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மேல்முறையீட்டில் தாவாச் சொத்தில் வாதி குடும்பத்தாரின் அனுபவத்தை இடைஞ்சல் செய்த பிரதிவாதி தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி மேல்முறையீட்டு மனு விசாரணைக்கு பிறகு மேற்படி புல எண்ணுக்கு ரெத்தினசாமி செட்டியாரின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

4. கடந்த 03.06.2021ம் தேதி மேற்படி இராமநாதன் இறந்துள்ளார். மேற்படி இராமநாதன் இறப்பிற்கு பின் வாதி தாவாச் சொத்தினை மற்ற வாரிசுகளுக்காவும் சேர்த்து பாதுகாத்தும், பராமரித்தும் வந்துள்ளார். அதன் பிறகு கடந்த 15.07.2022ம் தேதியன்று


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:38:46 +0530

பிரதிவாதி தாவாச் சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சித்துள்ளார். மேற்படி பிரதிவாதியின் செயலை வாதி தடுத்து நிறுத்தியுள்ளார். தாவாச் சொத்திற்கும் பிரதிவாதிக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது. பிரதிவாதி வாதியின் குடும்பத்திற்கு சம்பந்தம் இல்லாதவர் ஆவார். எனவே, பிரதிவாதிக்கு எதிராக மேற்கண்ட பரிகாரங்கள் கோரி, வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்ப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :—</u>**

5. வழக்கு சொத்து குடியிருப்பு நத்தமாக இருந்து வருகிறது. வழக்கு சொத்தில் பிரதிவாதியின் கணவரின் முன்னோர்கள் காலம் தொட்டு வழக்குச் சொத்தில் குடியிருந்து கொண்டு, ஒரு பகுதியில் நாட்டு செக்கு வைத்தும், இதரப் பகுதியில் ஆடுமாடு கட்டியும், குப்பைக்குழி போட்டு, விறகு போட்டும் தொடர்ந்து அனுபவம் செய்து வந்துள்ளனர். ஆனால், வழக்குச் சொத்து வருவாய்த்துறை கணக்குகளில் சமீபத்தில் சர்க்கார் புறம்போக்கு என தவறுதலாக வகை செய்யப்பட்டுள்ளது. அது வழக்குச் சொத்தில் பிரதிவாதியின் அனுபவத்தை பாதிக்காது. வழக்குச் சொத்தில் ரெத்தினசாமிக்கோ அவரது முன்னோர்களுக்கோ, வாரிசுகளுக்கோ எந்த உரிமையும், பாத்தியமும் எந்த காலத்திலும் இருந்ததில்லை.

6. வழக்குச் சொத்தைப் பொறுத்து எந்தவித அறிவிப்பும் கொடுக்காமல் சார் ஆட்சியர் பிறப்பித்த உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேற்படி உத்தரவு முறையான விசாரணைக்கு பின் ரத்து செய்யப்பட்டுள்ளது. வழக்குச் சொத்திற்கு பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் செய்து தரக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது. வழக்குச் சொத்தைப் பொறுத்து வாதி கோரும் உரிமை பிரதிவாதியால் மறுக்கப்பட்டுள்ளது. வழக்குச் சொத்தில் வாதியை தவிர ரெத்தினசாமியின் வாரிசுகள் யாரும் பிரதிவாதியின் உரிமை மற்றும் அனுபவத்தை மறுக்கவில்லை. எனவே, இவ்வழக்கினை பிரதிவாதியின் செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யக் கோரி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:38:54 +0530

7. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

**<u>எழுவினாக்கள் : –</u>**

1. Whether the suit is bad for without the prayer of declaration ?
2. Whether the suit is bad for non – joinder of necessary party ?
3. Whether the order passed by Sub Collector dated. 02.07.2018 is illegal ?
4. Whether the Plaintiff and the Rethinasamy's LR enjoy the exclusive possession of suit property as alleged by plaintiff ?
5. Whether the Plaintiff is entitled for the relief of Permanent Injunction ?
6. To what other relief parties are entitled to do ?

8. வாதி தரப்பில், வாதி சுரேந்திரபாபு என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் மணிவாசகம் என்பவர் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் தாமோதரன் என்பவர் பி.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் பழனியப்பன் என்பவர் பி.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

9. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதியின் அதிகார முகவரான கோபாலகிருஷ்ணன் என்பவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் நாகராஜன் என்பவர் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதி தரப்பில் கோவிலூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த முரளி என்பவர் பி.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:39:02 +0530

10. இருதரப்பிலும் செய்யப்பட்ட வாதம் மற்றும் ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது. பிரதிவாதி தரப்பில் கீழ்கண்ட முன்தீர்ப்பு மேற்கோள் காட்டப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டது.

1. A.C. Bakthan & ANR Vs Rosi Ammal (2010(2) MLJ 1001)

11. இரு தரப்பிலும் செய்யப்பட்ட வாதம், வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, மேலே வனையப்பட்ட எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்வு காண்கிறது.

<u>**எழுவினா –2:–**</u>

2. Whether the suit is bad for non – joinder of necessary party ?

12. பிரதிவாதி தரப்பில் தாவாச் சொத்து ரெத்தினசாமி செட்டியாரின் வாரிசுகள் அனைவருக்கும் சொந்தமானது என வாதி தரப்பில் கூறப்பட்டுள்ள நிலையில், அவரது வாரிசுகள் அனைவரையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வாதி தரப்பில் தாவாச் சொத்து ரெத்தினசாமி செட்டியார் என்பவரால் கிரையம் பெறப்பட்டு அவரது வாரிசுதாரர்களால் அனுபவம் செய்யப்பட்டு வருவதாகவும், பிரதிவாதி அதில் தடை, இடைஞ்சல் செய்தவாகவும் கூறி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக கூறும் நபர்களில் யாரேனும் ஒருவர் சொத்தின் அனுபவத்தை பாதுகாப்பதற்காக வழக்கு தாக்கல் செய்யலாம் என்பதால், இவ்வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற பிரதிவாதி தரப்பு எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதால் இவ்வழக்கு அவசிய தரப்பினரை


SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.07 17:39:11 +0530

சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்படவில்லை என்று இந்த எழுவினா 2க்கு இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**<u>எழுவினா– 3:–</u>**

> 3. Whether the order passed by Sub Collector dated. 02.07.2018 is illegal ?

13. இவ்வழக்கானது வாதியால் தாவாச் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், 02.07.2018ம் தேதி சார் ஆட்சியர் பிறப்பித்துள்ள உத்தரவு செல்லத்தக்கதல்ல என்ற கோரி பிரதிவாதி தரப்பில் பரிகாரம் எதுவும் கோரப்படாத நிலையிலும், மேற்படி உத்தரவு பி.சா.ஆ.5 புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகள் மூலமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் செல்லும் தன்மை குறித்து இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை என்று இந்த எழுவினா 3க்கு இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**<u>எழுவினாக்கள் – 1, 4 மற்றும் 5:–</u>**

> 1. Whether the suit is bad for without the prayer of declaration ?
>
> 4. Whether the Plaintiff and the Rethinasamy's LR enjoy the exclusive possession of suit property as claimed by plaintiff ?
>
> 5. Whether the Plaintiff is entitled for the relief of Permanent Injunction ?

14. வாதி தரப்பில், வாதி சுரேந்திரபாபு என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் வழக்குரையில் கண்டுள்ள பொருண்மைகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக, 13.09.1934 தேதியிட்ட வாதியின் தாத்தா ரெத்தினசாமி செட்டியார் பெயரிலான தாவா சொத்தின் கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 24.05.1999 தேதியிட்ட வாதியின் தாத்தா ரெத்தினசாமி

செட்டியாரின் வாரிசு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 06.07.2016 தேதியிட்ட வாதியின் தந்தை சந்திரசேகரன் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 14.07.2021 தேதியிட்ட வாதியின் பெரிய தந்தை இராமநாதனின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 01.01.1934 முதல் 2017 ஆண்டு வரையிலான வில்லங்க சான்றிதழ்கள் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 02.07.2018 தேதியிட்ட புதுக்கோட்டை கோட்டாட்சியரின் பட்டா மாறுதல் உத்தரவு சார்பு நகல் வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு உரிய 10(1) சிட்டா உண்மை நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கான அடங்கல் உண்மை நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. வாதி தரப்பில், மணிவாசகம் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், வழக்கு சொத்து வாதியின் தாத்தா ரெத்தினசாமி செட்டியாருக்கு பாத்தியப்பட்ட இடம் என்றும், வாதியின் தந்தை இராமநாதன் 2021ம் வருடம் இறந்துவிட்டதாகவும், வழக்குச் சொத்தினை வாதி வாரிசு அடிப்படையில் அடைந்து அனுபவித்து வருவதாகவும், தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தமானது கிடையாது என்றும், வழக்கு சொத்தில் பிரதிவாதி எந்த காலத்திலும் அனுபவத்தில் இருந்தது கிடையாது என்றும், வழக்குச் சொத்து இருக்கும் இடம் வாணிய செட்டி தெரு என அழைப்பார்கள் என்றும், வழக்கு சொத்து கிழமேல் வீதியில் தென் பகுதியில் உள்ளதாகவும், வழக்கு சொத்துக்கு மேற்கு பகுதியில் முருகையா செட்டியார் வீடு உள்ளதாகவும், கிழக்கு பகுதியில் நாகலெட்சுமி வீடு உள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. வாதி தரப்பில், தாமோதரன் என்பவர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், வழக்கு சொத்து தனது வீட்டுக்கு வடபுறம் உள்ள தெருவில் அமைந்துள்ளதாகவும், வழக்கு சொத்திற்கு நேர் பின்புறம் உள்ள வீட்டிற்கு கிழக்கு பகுதியில் தனது வீடு அமைந்துள்ளதாகவும், தாவா சொத்து வாதியின் குடும்பத்திற்கு


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:39:28 +0530

பாத்தியபட்ட பூர்வீக சொத்து என்றும், தாவா சொத்து வாதி குடும்பத்திற்கு பாக அடிப்படையில் கிடைத்து வாதியின் அனுபத்திலும் பாத்தியத்திலும் இருந்து வருவதாகவும், வாதி தஞ்சாவூரில் மருத்துவராக இருந்து வருவதாகவும், பிரதிவாதி வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் அனுபவத்திலோ பாத்தியத்திலோ இருந்தது கிடையாது என்றும், வழக்கு சொத்திற்கு வடபுறம் கிழமேல் வீதி உள்ளதாகவும், தாவா சொத்து வாதியின் குடும்பத்தாருக்கு சொசைட்டி மூலம் கிரையம் பெற்ற வகையில் பாத்தியபட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. வாதி தரப்பில், பழனியப்பன் என்பவர் வா.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், வழக்கு சொத்து கந்தர்வகோட்டை கோவிலூர் கிராமத்தில் அமைந்துள்ளதாகவும், வழக்கு சொத்து வாதியின் தாத்தா ரெத்தினசாமி செட்டியாருக்கு பாத்தியபட்டது என்றும், வாதி வாரிசு அடிப்படையில் அடைந்து அனுபவித்து வருவதாகவும், வாதி தாவா சொத்தில் ஆஸ்பெட்டாஸ் கொட்டகை அமைத்துள்ளதாகவும், தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தமானது கிடையாது என்றும், வழக்கு சொத்தில் பிரதிவாதி அனுபவத்தில் இருந்தது கிடையாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

18. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவரான கோபாலகிருஷ்ணன் என்பவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் எதிர்வழக்குரையில் கண்டுள்ள பொருண்மைகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக, 31.03.1959 தேதியிட்ட பிரதிவாதியின் கணவர் பெயரில் ஏற்பட்டுள்ள வரி ரசீது அசல் பி.சா.ஆ. 1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.1962 தேதியிட்ட பிரதிவாதியின் கணவர் பெயரில் ஏற்பட்டுள்ள வரி ரசீது அசல் பி.சா.ஆ. 2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள மின் வாரியத்தில் வைப்புத் தொகை செலுத்தியதற்கான ரசீது பி.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள மின் வாரியத்தில் முன்பணம் செலுத்தியதற்கான ரசீது பி.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 30.11.2021 தேதியிட்ட புதுக்கோட்டை


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:39:38 +0530

மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகள் பி.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 20.04.1997 தேதியிட்ட பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பி மெமோ அசல் பி.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 15.04.2003 தேதியிட்ட பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பி மெமோ அசல் பி.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 14.07.2023 தேதியிட்ட தாவா சொத்திற்கான நான்கெல்லை குறித்து கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட சான்று பி.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 02.02.2021, 27.07.2021, 19.05.2022, 29.07.2023 மற்றும் 17.06.2025 ஆகிய தேதிகளிட்ட பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள வீட்டு வரி ரசீதுகள் முறையே பி.சா.ஆ. 9 முதல் பி.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

19. பிரதிவாதி தரப்பில், நாகராஜன் என்பவர் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், வழக்குச் சொத்து நத்தம் வகைப்பாடுடையது என்றும், வழக்குச் சொத்தில் தனக்குத் தெரிய ஆரம்பத்தில் கூரைவீடு இருந்ததாகவும், அதில் அய்யாவு செட்டியாரும் அவரது மனைவி மங்கையர்கரசியும் குடியிருந்து வந்ததாகவும், பின்னர் கஜா புயல் ஏற்பட்ட சமயம் மேற்படி கூறைவீடு சேதமடைந்ததால் அதன்பின் ஆஸ்பெஸ்டால் கூறைபோட்ட வீடு போடப்பட்டு அதில் தற்போதுவரை அய்யாவு செட்டியார் மனைவி மங்கையர்கரசி குடியிருந்து அனுபவம் செய்து வருவதாகவும், மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதாகவும், வழக்குச் சொத்தில் தனக்குத் தெரிய அய்யாவு செட்டியார் மற்றும் அவரது மனைவி மங்கையர்கரசியைத் தவிர வேறு யாரும் எந்தவித அனுபவமும் செய்யவில்லை என்றும், தற்போதும் மங்கையர்கரசிதான் குடியிருந்து அனுபவம் செய்து வருவதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

20. பிரதிவாதி தரப்பில் கோவிலூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த முரளி என்பவர் பி.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், தாவாச் சொத்து ஆரம்பக்காலத்தில் இருந்து தற்போது வரை நத்தம் வகைபாட்டில் இருந்து வருவதாகவும், தான் தாவா சொத்தினை பார்வையிட்டதாகவும், அதில் ஆஸ்பெஷ்டாஸ்


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:39:53 +0530

சீட் வீடு உள்ளதாகவும், அந்த வீட்டில் அய்யாவு மனைவி மங்கையற்கரசி என்பவர் குடியிருந்து வருவதாகவும், அந்த தெருவிற்கு பெயர் வாணியச்செட்டியார் தெரு என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அவர் மூலமாக, கோவிலூர் கிராம புல எண் 361/16 பழைய புல எண் 188/2 இல் கண்ட சொத்திற்கான செட்டில்மெண்ட் பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கோவிலூர் கிராம புல எண் 361/16 பழைய புல எண் 188/2 இல் கண்ட சொத்திற்கான, நிலஉடைமை மேம்பாட்டுத்திட்ட அ பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கோவிலூர் கிராம புல எண் 361/16 பழைய புல எண் 188/2 இல் கண்ட சொத்திற்கான, நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

21. புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை தாலுகா, கோவிலூர் கிராமம் பழைய புல எண்.188/2, புதிய எண்.361/16இல் கண்ட 0.02.5 ஏர்ஸ் விஸ்தீரணமுள்ள சொத்து தாவாச் சொத்தாகும். வாதி தரப்பில் தாவாச் சொத்து கடந்த 13.09.1934ம் தேதி வாதியின் தாத்தா P.K.K.ரெத்தினசாமி செட்டியார் என்பவரால் கிரையம் பெறப்பட்டு அதுநாள் முதல் அவரால் அனுபவம் செய்து வரப்பட்டு அவர் காலமான பிறகு அவரது வாரிசுதாரர்களால் 80 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் செய்யப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

22. பிரதிவாதி தரப்பில் தாவாச் சொத்து பிரதிவாதியின் கணவர் அய்யாவு செட்டியார் என்பவரால் நாட்டுசெக்கு அமைத்து அனுபவம் செய்து வரப்பட்டு தற்போது பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருவதாகவும், நத்தம் மனைவரி திட்டத்தின்கீழ் தாவாச் சொத்தில் அனுபவத்திலிருக்கும் பிரதிவாதிக்கு பட்டா வழங்கப்படவில்லை என்பதால், பட்டா வழங்கக்கோரி வருவாய்த்துறை அதிகாரிகளிடம் மனு அளித்து நிலுவையில் இருந்து வருவதாகவும், பிரதிவாதி தாவாச் சொத்திற்கான வரி வகையறாக்களை செலுத்தி வருவதாகவும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:40:02 +0530

23. பிரதிவாதி தரப்பில் தாவா கிரமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த முரளி என்பவர் பி.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக தாவாச் சொத்திற்கான செட்டில்மெண்ட் பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ.1 ஆகவும், நில உடைமை மேம்பாட்டு திட்ட அ– பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆகவும், நத்தம் நிலவரித் திட்ட தூய அடங்கல் உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பி.சா.3 தனது சாட்சியத்தில், ஆரம்ப காலத்திலிருந்து தற்போது வரை தாவாச் சொத்து நத்தம் வகைப்பாட்டில் இருந்து வருவாக சாட்சியம் அளித்துள்ளார். சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களை பரிசீலனை செய்ததில், தாவாச் சொத்தின் பழைய புல எண்.188/2இல் கண்ட சொத்து நத்தம் வகைப்பாடாக இருந்து வந்தது என்பது தெரிய வருகிறது. சா.சா.ஆ.3 ஆவணத்தினை பரிசீலனை செய்ததில், தாவாச் சொத்தான புல எண்.361/16இல் கண்ட சொத்தும் சர்க்கார் புறம்போக்கு நத்தமாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வாதி தரப்பிலும், புல எண்.188/2இல் கண்ட சொத்து புல எண்.361/16 ஆக மாற்றம் செய்யப்பட்டபோது, வருவாய் ஆவணங்களில் தவறுதலாக அரசு புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி ஆவணங்களின் படி தாவாச் சொத்தின் பழைய புல எண்.188/2 இல் கண்டமொத்த சொத்தும் நத்தம் வகைப்பாடாக இருந்து என்பது தெரிய வருகிறது. தாவாச் சொத்து தற்போதும், சர்க்கார் புறம்போக்கு நத்தம் வகைப்பாட்டில் உள்ளது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும்.

24. வாதி தரப்பில், வருவாய் ஆவணங்களில் தாவாச் சொத்து புறம்போக்கு என தவறுதலாக பதிவாகியுள்ள விபரம் தெரிய வந்தவுடன் ரெத்தினசாமி செட்டியாரின் மகன் ராமநாதன் என்பவர் புதுக்கோட்டை சார் ஆட்சியரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்து, அதில் பிரதிவாதியும் தரப்பினராக சேர்க்கப்பட்டு விசாரணைக்கு பிறகு தாவாச் சொத்திற்கு ரெத்தினசாமி செட்டியார் பெயரில் பட்டா வழங்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. 02.07.2018 தேதியிட்ட புதுக்கோட்டை கோட்டாட்சியரின் உத்தரவு வா.சா.ஆ.6 ஆகவும் தாவாச் சொத்திற்கான சிட்டா மற்றும் அடங்கல் முறையே


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:40:10 +0530

வா.சா.ஆ .7 மற்றும் வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்ததில், தாவாச் சொத்தைப் பொறுத்து ராமநாதன் செட்டியார் என்பவரால், பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் தாவாச் சொத்து நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதை நீக்கம் செய்து ரெத்தினசாமி செட்டியார் பெயரில் பட்டா பதிவு மேற்கொள்ள வா.சா.ஆ.6 உத்தரவு மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், அதன் அடிப்படையில் தாவாச் சொத்திற்கான சிட்டா மற்றும் அடங்கல் ரெத்தினசாமி செட்டியார் பெயரில் ஏற்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

25. பிரதிவாதி தரப்பில் மேற்படி சார் ஆட்சியர் பிறப்பித்த உத்தரவு மீது மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் மேற்படி உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை மறைத்து வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. 30.11.2021 தேதியிட்ட புதுக்கோட்டை வருவாய் அலுவலரின் செயல்முறைகள் பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவினை பரிசீலனை செய்ததில், 02.07.2018ம் தேதி புதுக்கோட்டை சார் ஆட்சியரால் பிறப்பிக்கப்பட்ட வா.சா.ஆ.6 உத்தரவு ரத்து செய்யப்பட்டு தாவாச் சொத்தினை நத்தம் நிலவரி திட்டத்தில் உள்ளவாறு நத்தம் என்று அரசு புறம்போக்காக வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும், அனுபவப்படி உரிமை கோருவதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, தாவாச் சொத்திற்கு தற்போது வாதி மற்றும் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்படவில்லை என்பதும், தற்போதும் நத்தம் சொத்தாகவே இருந்து வருகிறது என்பதும் தெரிய வருகிறது.

26. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், தாவாச் சொத்து வாதியின் தாத்தா ரெத்தினாசாமி செட்டியார் என்பவரால் 13.09.1934ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலமாக கிரையம் பெறப்பட்டுள்ளது என்பதால் தாவாச் சொத்தின் உரிமை மூலம் ரெத்தினசாமி செட்டியார் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:40:30 +0530

சொந்தமானது என்பதால், அனுபவம் உரிமை மூலத்தின் பின் செல்லும் (Possession follows title) என்ற சட்டக் கோட்பாட்டின் படி தாவாச் சொத்தின் உரிமை மற்றும் அனுபவம் வாதி குடும்பத்தாரின் வசம் இருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

27. பிரதிவாதி தரப்பில் தாவாச் சொத்தின் அனுபவம் அய்யாவு செட்டியார் காலத்திலிருந்து பிரதிவாதி குடும்பத்தாரின் வசமிருந்து தற்போது அய்யாவு செட்டியார் மனைவியான பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருவதாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் தாவாச் சொத்தில், எவ்வித கட்டுமானமோ, வீடோ இருப்பதாக கூறப்படவில்லை. வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் தாவாச் சொத்தில் எவ்வித கட்டுமானமும் இருப்பதாக சாட்சியம் அளிக்கவில்லை. வா.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ள பழனியப்பன் மட்டும் தனது சாட்சியத்தில் வாதி தாவாச் சொத்தில் ஆஸ்பெட்டாஸ் கொட்டகை அமைத்துள்ளதாக வாதி தரப்பு வழக்கில் கூறப்படாத பொருண்மை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். தாவாச் சொத்தில் ஆஸ்பெட்டாஸ் சீட்டு கூரை போட்ட வீடு அமைத்து அனுபவம் செய்து வருவதாக பிரதிவாதி தரப்பு வழக்கு அமைந்துள்ளது. பி.சா.3 கிராம நிர்வாக அலுவலர் தனது சாட்சியத்தில், தாவாச் சொத்தை பார்வையிட்டதாகவும், அதில் ஆஸ்பெட்டாஸ் சீட்டு வீடு உள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, தாவாச் சொத்தில் தற்போது ஆஸ்பெட்டாஸ் கூரை போட்ட வீடு உள்ளது என்பது தெரிய வருகிறது. தாவாச் சொத்தைப் பொறுத்து 20.04.1997 மற்றும் 15.04.2003 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டுள்ள பி மெமோக்கள் அசல் முறையே பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்ததில், தாவாச் சொத்தான புல எண்.361/16இல் கண்ட சர்க்கார் நத்தம் மனை சொத்தில் பிரதிவாதி கொட்டகை போட்டு குப்பைக்குழி அமைத்து அனுபவம் செய்து வருவதாக குறிப்பிட்டு பி மெமோக்கள் வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி ஆவணங்கள் தாவாச் சொத்தில் பிரதிவாதி கொட்டகை அமைத்து அனுபவத்தில் இருந்தார் என்பதை நிரூபணம் செய்யக்கூடிய ஆவணங்களாக அமைந்துள்ளது.


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:40:40 +0530

28. மேலும், பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 வரி ரசீதுகள் பி.சா.ஆ.3, பி.சா.ஆ.4 ரசீதுகள் மற்றும் பி.சா.ஆ.9 முதல் பி.சா.ஆ.13 வரையிலான வீட்டு வரி ரசீதுகள் ஆகிய ஆவணங்கள் பிரதிவாதியின் அனுபவத்தை உறுதி செய்யக்கூடிய ஆவணங்களாக அமைந்துள்ளது. வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலமாக தாவாச் சொத்திற்கு வாதி தரப்பில் உரிமை கோரப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தினை பரிசீலனை செய்ததில், மேற்படி ஆவணத்தில் சர்வே எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதில் கண்ட சொத்தின் வகைப்பாடு குறித்தும் கூறப்படவில்லை. தாவாச் சொத்து அதன் பழைய புல எண்.188/2 ஆக இருந்ததிலிருந்து தற்போது வரை நத்தம் வகைப்பாடாக இருந்து வருவதாலும், தாவாச் சொத்தில் ஆஸ்பெட்டாஸ் கூரைபோட்ட வீடு இருந்து வருவதாலும், மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாக வாதியின் தாத்தா ரெத்தினசாமி செட்டியார் என்பவரால் கிரையம் பெறப்பட்டது தாவாச் சொத்துதான் என்பது முதலில் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட வேண்டும். தாவாச் சொத்தில் வீடு இ ருந்து வருவதால் அனுபவம் உரிமையின் பின் செல்லும் என்ற சட்டக்கோட்பாடு தாவாச் சொத்திற்கு பொறுத்தக்கூடியதில்லை. அந்த கோட்பாடு எவ்வித கட்டுமானமும் இல்லாத காலி நிலங்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடியதாகும்.

29. எனவே, வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாக வாதியின் தாத்தா ரெத்தினசாமி செட்டியார் என்பவரால் தாவாச் சொத்து கிரையம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் தாவாச் சொத்தின் உரிமை அவருக்கு கிடைத்தது என்ற பொருண்மை தீர்மானிக்கப்படாமல் இவ்வழக்கினை தீர்மானிக்க இயலாது. எனவே, தாவாச் சொத்தின் உரிமை மூலம் குறித்து விளம்புகை பரிகாரம் கோரப்படாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் மூலம் தாவாச் சொத்தில் உள்ள வீடு பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாலும், வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட 13.09.1934 தேதிக்கு பிறகு வாதி மற்றும் அவரது முன்னோர்கள் தாவாச் சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்பதை

காட்டுவதற்கு வாதி தரப்பில் எவ்வித உரிய ஆதாரங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், தாவாச் சொத்தைப் பொறுத்து வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த எழுவினாக்கள் 1, 4 மற்றும் 5 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**எழுவினா– 6:–**

6. To what other relief parties are entitled to do ?

30. எழுவினாக்கள் 1 முதல் 5க்கு வாதிக்கு பாதகமாக தீர்வு கண்டுள்ளதால், வாதிக்கு வேறு பரிகாரங்கள் ஏதும் கிடைக்கத்தக்கதல்ல என்று இவ்வெழுவினா – 6க்கு தீர்வு கண்டு, வழக்கின் செலவுத் தொகையை பொறுத்து வாதி மற்றும் பிரதிவாதி செலவு தொகைகளை, அவர் அவர்களே ஏற்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**31. இறுதியாக, இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகையில்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டப்பின், இன்று 07.03.2026ம் தேதி, இத்திறந்த நீதிமன்றத்தில் இவ்வவையறிய பகரப்படுகிறது.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.07 17:41:14 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**வாதி தரப்பு சாட்சிகள் : –**

| வாதி தரப்பு சாட்சிகளின் வரிசை | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் விபரம் |
|---|---|---|
| வா.சா.1 | திரு. சுரேந்திரபாபு | வாதி |
| வா.சா.2 | திரு. தாமோதரன் | 3ம் தரப்பினர் |
| வா.சா.3 | திரு. பழனியப்பன் | 3ம் தரப்பினர் |

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| சான்று ஆவணங்களின் வரிசை | தேதி | சான்றாவணங்களின் விபரம் | யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 13.09.1934 | வாதியின் தாத்தா ரெத்தினசாமி செட்டியார் பெயரிலான தாவா சொத்தின் கிரைய பத்திரம் அசல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.2 | 24.05.1999 | வாதியின் தாத்தா ரெத்தினசாமி செட்டியாரின் வாரிசு சான்றிதழ் அசல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.3 | 06.07.2016 | வாதியின் தந்தை சந்திரசேகரன் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.4 | 14.07.2021 | வாதியின் பெரிய தந்தை இராமநாதனின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.5 | 01.01.1934 to 2015, 2016 to 2017 | வில்லங்க சான்றிதழ்கள் சான்றிட்ட நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.6 | 02.07.2018 | புதுக்கோட்டை கோட்டாட்சியரின் பட்டா மாறுதல் உத்தரவு சார்பு நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.7 | -- | தாவா சொத்திற்கு உரிய 10(1) சிட்டா உண்மை நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.8 | -- | தாவா சொத்திற்கான அடங்கல் உண்மை நகல் | வா.சா.1 |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:–</u>**

| வாதி தரப்பு சாட்சிகளின் வரிசை | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் விபரம் |
|---|---|---|
| பி.சா.1 | திரு. கோபாலகிருஷ்ணன் | பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் |
| பி.சா.2 | திரு. நாகராஜன் | 3ம் தரப்பினர் |
| பி.சா.3 | திரு. முரளி | கிராம நிர்வாக அலுவலர், கோவிலூர். |

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| சான்று ஆவணங்களின் வரிசை | தேதி | சான்றாவணங்களின் விபரம் | யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 31.03.1959 | பிரதிவாதியின் கணவர் பெயரில் ஏற்பட்டுள்ள வரி ரசீது அசல் | பி.சா.1 |
| பி.சா.ஆ.2 | 30.09.1962 | பிரதிவாதியின் கணவர் பெயரில் ஏற்பட்டுள்ள வரி ரசீது அசல் | பி.சா.1 |
| பி.சா.ஆ.3 | –– | பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள மின் வாரியத்தில் வைப்புத் தொகை செலுத்தியதற்கான ரசீது | பி.சா.1 |
| பி.சா.ஆ.4 | –– | பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள மின் வாரியத்தில் முன்பணம் செலுத்தியதற்கான ரசீது | பி.சா.1 |
| பி.சா.ஆ.5 | 30.11.2021 | புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகள் | பி.சா.1 |
| பி.சா.ஆ.6 | 20.04.1997 | பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பி மெமோ அசல் | பி.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.7 | 15.04.2003 | பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பி மெமோ அசல் | பி.சா.1 |
| பி.சா.ஆ.8 | 14.07.2023 | தாவா சொத்திற்கான நான்கெல்லை குறித்து கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட சான்று | பி.சா.1 |
| பி.சா.ஆ.9 | 02.02.2021 | பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள வீட்டு வரி ரசீது | பி.சா.1 |
| பி.சா.ஆ.10 | 27.07.2021 | பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள வீட்டு வரி ரசீது | பி.சா.1 |
| பி.சா.ஆ.11 | 19.05.2022 | பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள வீட்டு வரி ரசீது | பி.சா.1 |
| பி.சா.ஆ.12 | 29.07.2023 | பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள வீட்டு வரி ரசீது | பி.சா.1 |
| பி.சா.ஆ.13 | 17.06.2025 | பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள வீட்டு வரி ரசீது | பி.சா.1 |
| சா.சா.ஆ.1 | -- | கோவிலூர் கிராம புல எண் 361/16 பழைய புல எண் 188/2 இல் கண்ட சொத்திற்கான செட்டில்மெண்ட் பதிவேட்டின் உண்மை நகல் | பி.சா.3 |
| சா.சா.ஆ.2 | -- | கோவிலூர் கிராம புல எண் 361/16 பழைய புல எண் 188/2 இல் கண்ட சொத்திற்கான, நில உடைமை மேம்பாட்டுத்திட்ட அ-பதிவேட்டின் உண்மை நகல் | பி.சா.3 |

| | | | |
|---|---|---|---|
| சா.சா.ஆ.3 | -- | கோவிலூர் கிராம புல எண் 361/16 பழைய புல எண் 188/2 இல் கண்ட சொத்திற்கான, நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் | பி.சா.3 |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:41:25 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**